செ.வெ.எண். 09

நாள். 07.10.2017

ந.க. எண் ஒள3/35642/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி,
நாள். 10.2017

# பத்திரிக்கைச் செய்தி

01.01.2018-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களை சிறப்பு சுருக்கமுறை திருத்தம் செய்யுமாறு இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியல்களை கிராம சபை கூட்டங்களில் வாசித்து ஒப்புதல் பெறுவதற்கு ஏதுவாக 07.10.2017 **(சனிக்கிழமை )** மற்றும் **21.10.2017 (சனிக்கிழமை)** ஆகிய இரு நாட்கள் ஊராட்சி மன்றங்களில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தப்பட உள்ளது. அதே போன்று நகர் பகுதியில் குடியிருப்போர் நல சங்கங்களில் வரைவு வாக்காளர் பட்டியல் வைக்கப்படவுள்ளது.

மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, **08.10.2017** (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 22.10.2017 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 2931 வாக்குச்சாவடிகளை உள்ளடக்கிய 1368 நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம் காலை 9.30 மணி முதல் 5.30 மணி வரை நடத்தப்பட உள்ளது.

இம்முகாமில் 01.01.2018 அன்று 18 வயது பூர்த்தியாகும் நபர்கள் (31.12.1999 வரை பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியல்களில் தங்களது பெயரினைச் சேர்க்க **(படிவம்-6),** வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள நபர்களில் இறந்தவர்கள் / இரட்டைப்பதிவு உள்ளவர்களின் பெயரினை நீக்க **(படிவம் - 7)** பெயர், முகவரி மற்றும் புகைப்பட விபரங்களை திருத்தம் செய்ய **(படிவம்-8),** மற்றும் அதே சட்டமன்ற தொகுதிக்குள் இடமாற்றம் செய்திட **(படிவம் -8A)** ஆகியவற்றை வழங்கலாம்.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை சிறந்த முறையில் பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி